# ஆழிப்பேரலை அழிவின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்றைய தினம்

## யாழ் உடுத்துறையில் மக்கள் அஞ்சலி



இலங்கையில் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களை காவு கொண்ட ஆழிப்பேரலையின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கில் இடம்பெற்றது.

உடுத்துறை சுனாமிப் பொது நினைவாலயத்தில் உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நினைவேந்தல் இடம்பெற்றது.

சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு காலை 9.25 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

முன்னராக இலங்கை தேசிய கொடியை மருதங்கேணி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏற்றிவைத்தார்.

பொதுச்சுடரை மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரபாகரமூர்த்தி ஏற்றிவைத்தை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் புகைப்படங்களுக்கு மாலையிட்டு தீபங்கள் ஏற்றி உணவுகளை படைத்து உறவினர்கள் அஞ்சலித்தனர்.

இதன்போது பெருமளவான பொது மக்கள், மதகுருமார்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டதுடன் உறவினர்கள் உயிரிழந்தவர்களை நினைத்து கண்ணீர் மல்கினர்.

2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir


சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 05 செவ்வாய்க்கிழமை 26.12.2023 கதிர் 144

## நாளை வருகிறது மிதிவெடி!

நாளை முதல் ஒவ்வொரு புதன்கிழமையும் உங்களபிமான மாலைக்கதிர் பத்திரிகையில் “மிதிவெடி” எனும் புதிய பத்தி வெளிவர இருக்கிறது.

கண்ட கண்ட இடத்தில் எல்லாம் கால், கை வைப்பவர்கள் இப்பொழுதே அவதானமாக இருந்து கொள்ளுங்கள்!

உங்களுக்கு சம்பந்தம் இல்லாத இடங்கள், பொருட்கள், அதிகாரங்கள் மற்றும் பதவிகளுக்கு ஆசைப்படுபவர்கள் அடையாளப்படுத்தப்படுவர்!



## யாழ். பல்கலைக்கழகத்தில் சுனாமி நினைவேந்தல்

ஆழிப்பேரலையில் உயிர் நீத்த உறவுகளுக்கான 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

பேரலையில் உயிர்நீத்த உறவுகளின் நினைவுருவப் படங்களுக்கு அகவணக்கம் செலுத்தி ஈகைச் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்போது மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கையில் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி கோரத்தாண்டவம் ஆடிய சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று இன்றுடன் 19 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. (அ)

## யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி வரும்போது காணி விடுவிப்பு தொடர்பில் பச்சைக்கொடி

### அமைச்சர் டக்ளஸ் தகவல்



யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி வரும் வேளை காணி விடுவிப்புக்கள் தொடர்பில் பச்சைக்கொடி காட்டப்படும் என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்துள்ளார்.

யாழில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வனவள பாதுகாப்பு, வன ஜீவராசி திணைக்களம் என்வற்றின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள காணி விடுவிப்பு தொடர்பில் 11 கட்டம் இருந்தது. அதில் 4 கட்டமே பூர்த்தியாகியுள்ளது. ஏனைய கட்ட

2 ▶

## சுனாமி முன் எச்சரிக்கை ‘ரிங்கிங்’ டோன் அறிமுகம்

கொழும்பு, டிசெ. 26

சுனாமியால் பாதிக்கப்படக்கூடிய கிட்டத்தட்ட 60,000 மொபைல் மற்றும் நிலையான தொலைபேசி பாவனையாளர்களின் எண்களுக்கு சைரன் ஒலியுடன் உடனடி எச்சரிக்கை ரிங்கிங் டோன் அறிவிப்பை அனுப்புவதற்கான அதிநவீன தொழில்நுட்பம் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, கடற்கரைக்கு அருகில் வசிக்கும் மக்கள், இரவில் சைரன் ஒலியுடன் தங்கள் தொலைபேசிகளை ஒலிக்கும் வகையில் இந்த மிகவும் பயனுள்ள முன் எச்சரிக்கை சமிக்ஞையை பெறுவதற்கான பொறிமுறையை நிறுவ முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு இன்று (26) இந்த புதிய முறைமை மக்கள் மயப்படுத்தப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ரெதி-28)

## யாழ் பல்கலை மாணவியின் மரணத்தில் சந்தேகம் அவரது குடும்பத்தினரால் பொலிஸில் முறைப்பாடு

அண்மையில் உயிரிழந்த யாழ் பல்கலைக்கழக மாணவியின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாகத் தெரிவித்து அவரது குடும்பத்தினரால் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குறித்த மாணவிக்கு செலுத்தப்பட்ட மருந்தின் ஒவ்வாமை காரணமாகவே உயிரிழப்பு இடம்பெற்றதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த பெண்ணுக்கு எவ்விதமான ஒவ்வாமையும் இல்லை எனவும் செலுத்தப்பட்ட ஊசி மருந்து என்னவென்பது தமக்கு தெரிவிக்கப்படவில்லை எனவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் இறுதியாண்டில் கல்வி கற்ற குணரத்தினம் சுபீனா என்ற 25 வயதான மாணவி கடந்த 23 ஆம் திகதி உயிரிழந்தார்.

காய்ச்சல் காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவி, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றியனுப்பப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி மாணவி உயிரிழந்தார்.

உயிரிழந்த மாணவியின் இறுதிக்கிரியை நேற்று (25) இடம்பெற்ற நிலையில், தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் அவரது மரணம் தொடர்பாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (04)

## உயர்தரப் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

உயர்தரப் பரீட்சை தொடர்பான ரியூஷன் வகுப்புகள், விளம்பர ஊக்குவிப்பு நடவடிக்கைகள் ஆகிய அனைத்தையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (29) நள்ளிரவுக்குப் பின்னர் மேற்கொள்ள அனுமதி கிடையாது என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

2 ▶

## தேடுதல் நடவடிக்கை தொடர்கிறது! பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்



நத்தார் பண்டிகையை முன்னிட்டு பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியதால், தேடுதல் நடவடிக்கைகளை தற்காலிகமாக பிற்போட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார்.

2 ▶

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் 72 ஆயிரத்து 903 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்த நிலையில், இந்த வருடத்தில் இதுவரையில் 85 ஆயிரத்து 636 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இந்த ஆண்டில் இதுவரை 50 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர். கடந்த ஒரு வாரத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும், அதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் திடீரென அதிகரித்துள்ளது.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 11 மாத ஆண் குழந்தையொன்று நேற்று உயிரிழந்துள்ளது.

இந்த மாதத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் வேகமாக அதிகரித்துள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் உலகளவில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## தேர்தல் குறித்து இதுவரை எந்தவொரு முடிவுமில்லை!

### சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு



தேர்தல் குறித்து இதுவரை எந்தவொரு முடிவும் எடுக்கவில்லை, என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பது அல்லது தமிழ்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளரைக் களமிறக்குவதா? அல்லது ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்காமல் தேர்தலைப் புறக்கணிப்பதா? என்பது தொடர்பில் எந்தத் தீர்மானமும் இதுவரை எடுக்கவில்லை.

அத்தோடு தமிழ் மக்கள் பக்கம் நின்றே நாம் தீர்க்கமான முடிவினை எடுப்போம் எனவும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலோ அதன் வேட்பாளர் தொடர்பிலோ நாம் அவசரப்படமாட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நத்தார் ஆராதனைக்கு சென்ற கோடீஸ்வரரின் வீட்டில் 70 லட்சம் ரூபா மதிப்புள்ள தங்கம், பணம் கொள்ளை!

கொழும்பு, டிசெ. 26

உடப்பு, புனவிட்டிய பிரதேசத்தில் வசிக்கின்ற தேங்காய் மற்றும் இறால் பண்ணை வைத்திருக்கும் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் வீட்டில் நேற்று (25) அதிகாலை நத்தார் ஆராதனைக்காக தேவாலயம் சென்றிந்த சமயம் அவரது வீட்டிற்குள் நுழைந்து 70 லட்சம் ரூபா பெறுமானமுள்ள தங்கம் மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோடீஸ்வர வர்த்தகர் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் நேற்று முன்தினம் (24) புனாப்பிட்டிய குழந்தை இயேசு தேவாலயத்தில் நடைபெற்ற நள்ளிரவு நத்தார் ஆராதனைக்கு சென்று விட்டு, அதிகாலை வீடு திரும்பிய போது வீட்டிலிருந்த தங்கம் மற்றும் பணம் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொலிசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், தொழிலதிபரின் வீட்டின் ஜன்னலை உடைத்து வீட்டுக்குள் புகுந்து இந்த திருட்டு சம்பவத்தை நடத்தியிருப்பதாக தெரியவந்துள்ளது. திருட்டுச் சம்பவம் தொடர்பில் உடபுவ பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தம்மிக்க குலதுங்கவின் பணிப்புரையின் பேரில் பொலிஸ் மோப்ப நாய் பிரிவின் உதவியுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ரெதி-30)

## கெஹலிய ரம்புக்வெலவிடம் இன்று மதியம் வாக்குமூலம்



குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் இன்று மதியம் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் வீட்டிற்கு வாக்குமூலம் பெறுவதற்காக சென்றுள்ளளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

தரமற்ற நோய் எதிர்ப்பு மருந்துகளை நாட்டுக்கு இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பில் அவரிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவவும் தெரிவித்திருந்தார்.

## தேடுதல் நடவடிக்கை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை குறித்த நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை எனவும் பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய அவை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த நடவடிக்கையின் காரணமாக சிலர் தங்களுடைய இருப்பிடத்தை மாற்றி அவற்றில் ஈடுபட்டு வருவதாகவும், இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா குறிப்பிட்டுள்ளார். (04)

## உயர்தரப் பரீட்சை ஏற்பாடுகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை தொடர்பான அனைத்து கருத்தரங்குகள், பட்டறைகள் உட்பட அனைத்து பிரச்சார நடவடிக்கைகளையும் நிறுத்திவிட்டு, ஜனவரி 4 ஆம் திகதி முதல் பரீட்சையை நடாத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பரீட்சையை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிபர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ரெதி-29)

## யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அவைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் 100 வீதம் சரிவரும் என்ற நம்பிக்கை உண்டு

உயர்பாதுகாப்பு வலயமாக படைத்தரப்புக்களின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்க தொடர்ந்து முயற்சிக்கிறேன். முடிந்த வரையில் காணி விடுவிக்க நடவடிக்கைகளை எடுப்பேன்.

ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரும் வேளையில் காணிகளை விடுவிக்கவோ, அல்லது அது தொடர்பில் பச்சை கொடியை ஜனாதிபதி காட்டுவார் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஏன் கலந்து கொள்ளவில்லை என அமைச்சரிடம் கேட்ட போது.

வடக்கில் எம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் நிறைய இருந்தமையால் நான் வடக்கில் தங்கி இருந்தேன். அதனால் சந்திப்புக்கு செல்லவில்லை. ஜனாதிபதியுடன் மக்களுக்காக தொலைபேசியில் கதைக்க கூடிய நிலையில் உள்ளேன். பல்வேறு தடவைகள் கதைத்தும் உள்ளேன்.

என் கட்சி சார்பில், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் கலந்து கொண்டார் என பதில் அளித்தார். (அ)

## ஆழிப்பேரலை அழிவின் 19 ஆவது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2004 டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை பேரனர்த்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்ததுடன் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் அழிந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# காரைதீவு விபுலானந்தா பாலர் பாடசாலையின் விடுகை விழா



(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா பாலர் பாடசாலையின் விபுலமணிகளின் விடுகை விழா பாடசாலை பணிப்பாளர் சபை உறுப்பினர் ஓய்வு நிலை அதிபர் க.புண்ணியநேசன் தலைமையில் காரைதீவு இராமகிருஷ்ண சங்க பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது .

வெள்ளி விழாக் காணும் விபுலானந்தா பாலர் பாடசாலை ஏனைய முன்பள்ளிகளுக்கு முன் மாதிரியாக சிறந்த பாடசாலையாக திகழ்கிறது, என்று காரைதீவு விபுலானந்தா பாலர் பாடசாலையின் 25வது வருடாந்த விபுலமணிகளின் விடுகை விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தெரிவித்தார்.

எமது பாரம்பரியங்களை கலாச்சாரங்களை இளம் சந்ததிக்கு நாங்கள் எடுத்து கூற வேண்டும் . முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த மண்ணில் அவரது நாமத்தோடு இயங்கும் இப்பாடசாலை சிறப்பாக இயங்கி வருவது பாராட்டுக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் கலந்துகொள்ள, சிறப்பு அதிதியாக காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், கௌரவ அதிதியாக வவுனியா மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சிவ சுந்தரம் சசிகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விபுலானந்தாவில் பயின்று கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த 9 மாணவர்கள் தங்கப் பதக்கம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

ஏனைய விடுகை பெறும் பயிலும் மாணவர்களும் அங்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டார்கள்.

ஆசிரியர்களான ரம்யா சனுஜா ஆகியோர் பெற்றோரால் கௌரவிக்கப்பட்டார்கள். பிள்ளைகளின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன.

# கல்முனையில் சுனாமி அனர்த்தத்தினால் உயிர்நீத்த உறவுகளுக்காக பிரார்த்தனை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 19 வருடங்கள் கடந்துள்ள நிலையில் உயிர்நீத்த தமது உறவுகளுக்காக கல்முனை கரையோர பிரதேசத்தின் பல இடங்களிலும் பிரார்த்தனைகளும், நினைவு தின நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பள்ளிவாசல்களில் விஷேட துவாப் பிரார்த்தனைகளும் கோயில், கிறிஸ்தவ தேவாலயங்கள் என்பவற்றில் மக்கள் விசேட பூசைகளிலும், ஆராதனைகளிலும் ஈடுபட்டனர்.

ஞாபகார்த்த மரநடுகையிலும் மையவாடி மற்றும் மயானங்களை துப்பரவு செய்வதிலும் இளைஞர் அமைப்புகள் ஈடுபட்டன.

கடற்கரையோர பிரேதேசங்களில் அமைக்கப்பட்டிருந்த நினைவு தூபிகளுக்கருகில் பெரும் திரளான மக்கள் கூடி தீபமேற்றி உயிர்நீத்த தமது உறவுகளுக்கு அஞ்சல் செலுத்தினார்கள்.

# சுனாமி நினைவு தினப் பிரார்த்தனைகளும் ஆராதனை நிகழ்வுகளும்





(நூருல் ஹுதா உமர்)

உலகை உலுக்கிய அனர்த்தங்கள் பல இருக்கிறது. அதில் அலையின் தாக்கம் தசாப்தங்கள் பல கடந்தும் அழியா நினைவுகள் கொண்டது. அந்த சுனாமியலையில் சிக்கி எமது நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

அதில் அம்பாறை மாவட்டத்தின் பாதிப்பு மிக அதிகம். உயிர்கள், உடமைகள், சொத்துக்கள் என பலதையும் இழந்து நின்ற மக்கள் தமது துயரநாளின் 19 வருடங்கள் கடந்துள்ளதை எண்ணி துஆ பிராத்தனைகள், நினைவஞ்சலிகள் நாடுமுழுவதிலும் நடந்து வருகின்றன.

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த சுனாமி நினைவு துஆ பிராத்தனை மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ஏ.எல்.எம். அன்வர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் குரான் ஓதி தமாம் செய்யப்பட்டதுடன் அந்நூர் ஜ/ம்மா பள்ளிவாசல் முன்னாள் பிரதம இமாம் மௌலவி ஏ. எல். எம். மின்ஹாஜ் (உஸ்மானி) துஆ பிராத்தனை செய்தார். நினைவுரையை மௌலவி ஏ. எல். எம். அலீம் (காஸிமி) நிகழ்த்தியதுடன். இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன், கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம். சபீஸ், மாளிகைக்காடு கிழக்கு கிராம நிலதாரி ஏ.எம். நஜீம், அரச அதிகாரிகள், அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகள், குரான் மதரஸா நிர்வாகத்தினர் மற்றும் மாணவர்கள், ஜனாஸா நலன்புரி அமைப்பின் உறுப்பினர்கள், சமூக பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு மர நடுகையும் அங்கு இடம்பெற்றது.

அல் – மீஸான் பௌண்டசன், ஶ்ரீலங்கா. ஏற்பாடு செய்த நினைவுதின நிகழ்வுகள் சாய்ந்தருதில் அமைப்பின் தவிசாளரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துஆ பிராத்தனை இடம்பெற்றதுடன் நினைவுரையும் இடம்பெற்றது.



# அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் குண்டுவீச்சு 106 பேர் உயிரிழப்பு - காஸா தெரிவிப்பு

காஸாவின் அகதிகள் முகாம் ஒன்றில் இஸ்ரேல் நடத்திய குண்டுவீச்சில் 106 பேர் உயிரிழந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அங்கு ஒரே தாக்குதலில் இத்தனை பேர் உயிரிழந்திருப்பது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது.

மத்திய காஸா பகுதியிலுள்ள நகரின் அல்-மகாஸி அகதிகள் முகாமில் போர் விமானம் மூலம் இஸ்ரேல் ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்குதல் நடத்தியுள்ளது.

இதில் 70 பேர் உயிரிழந்ததாக காஸா சுகாதாரத் துறை அமைச்சகம் முதலில் அறிவித்தது. எனினும், இந்த எண்ணிக்கை பின்னர் 106 ஆக அதிகரிக்கப்பட்டது.

காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் வான்வழித் தாக்குதலில் இது மிகவும் மோசமானதாகக் கூறப்படுகிறது. ஒரே ஒரு தாக்குதலில் இத்தனைப் பெரிய உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது இதுவே முதல்முறையாகும்.


இந்தத் தாக்குதல் தொடர்பாக வெளியாகும் தகவல்களை இஸ்ரேல் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

இது குறித்து இஸ்ரேல் ராணுவம் கூறுகையில், அல்-மகாஸி அகதிகள் முகாம் தாக்குதல் தொடர்பான தகவல்கள் குறித்து ஆய்வு செய்து வருவதாகத் தெரிவித்தது.

முன்னதாக, இந்தத் தாக்குதலில் அகதிகள் முகாமின் மிகப் பெரிய குடியிருப்புப் பகுதி அழிக்கப்பட்டுவிட்டதாகவும், அங்கு உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று காஸா சுகாதாரத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் அஷ்ரஃப் அல்-குத்ரா அச்சம் தெரிவித்திருந்தார்.

பாலஸ்தீன பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் ஹமாஸ் அமைப்பினர், அந்த நாட்டுடன் அடிக்கடி மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த மோதலின் உச்சக்கட்டமாக, இஸ்ரேல் மீது கடந்த ஒக்டோபர் 7 இல் சரமாரி ஏவுகணைத் தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினர் அந்த நாட்டுக்குள் தரை, கடல், வான்வழியாக நுழைந்து 1,200 க்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.



மேலும், அங்கிருந்து சுமார் 240 பேரை பிணைக் கைதிகளாக அவர்கள் பிடித்துச் சென்றனர் என்றும் கூறப்பட்டது.

அதையடுத்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக்கட்டப்போவதாக சூளுரைத்த இஸ்ரேல், காஸா பகுதியை முற்றுகையிட்டு அங்கு வான்வழியாகவும், தரைவழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதில் இதுவரை 20,674 பேர் உயிரிழந்ததாகவும், 54,536 பேர் காயமடைந்ததாகவும் காஸா சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (04)



## ஹிஸ்புல்லாவுக்கு பதிலடி கொடுக்கும் அமெரிக்கா

ஈரானிய தீவிரவாத இயக்கமான ஹிஸ்புல்லாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில்அமெரிக்க ராணுவம் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நேற்று ஹிஸ்புல்லா நடத்திய தாக்குதலில் அமெரிக்க பணியாளர்கள் மூவர் படுகாயமடைந்ததைத் தொடர்ந்து அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தாக்குதலுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்க பணியாளர்கள் மீது ஹிஸ்புல்லா மற்றும் தொடர்புடைய இயக்கங்கள் நடத்திய தொடர் தாக்குதலுக்காகவும் ஈர்பில் விமான தளத்தில் திங்கட்கிழமை அமெரிக்க பணியாளர்கள் மீது நடந்த தாக்குதலுக்காகவும் பதிலடியாக இதனை மேற்கொள்வதாக பாதுகாப்பு செயலர் லாய்ட் அஸ்டின் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் இன்று அதிகாலை 4.45 க்கு ஹிஸ்புல்லா சார்புடைய மூன்று இடங்களில் அமெரிக்க ராணுவம் குண்டுவீசியுள்ளது. தாக்குதல் நடந்த 13 மணி நேரத்துக்குள் பதில் தாக்குதல் நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க படைகள், ஆயிரக்கணக்கில் ஈராக் மற்றும் நூற்றுக்கணக்கில் சிரியாவில் நிலைகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ரேல்- ஹமாஸ் போர் விரிவடைவதை அமெரிக்கா கட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்து வருவதாகக் கூறப்படுகிறது. (04)

## உக்ரைன் நாட்டு மக்கள் முதல் முறையாக டிசம்பரில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்



உக்ரைன் மக்கள் ஜனவரி 7ஆம் திகதி கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடிவந்த நிலையில், தற்போது டிசம்பர் 25ஆம் தேதி முதல் முறையாக கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடியுள்ளனர்.

ஜூலியன் நாள்காட்டி மற்றும் ரஷ்ய அரசின் பாரம்பரிய முறைப்படி, ரஷ்யாவில் ஜனவரி மாதம் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. ரஷ்ய தரைப் பகுதியில் உள்ள உக்ரைனும் அந்தப் பாரம்பரிய விதி முறைகளுக்குட்பட்டு ஆண்டுதோறும் ஜனவரி 7ஆம் திகதி கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடி வந்தது.

இந்நிலையில், உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரின் எதிரொலியாக உக்ரைனுக்கு புதிய விதிமுறைகளை அந்நாட்டு அதிபர் வொலதிமீர் ஸெலென்ஸ்கி கடந்த ஜூலை மாதம் அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து ரஷ்ய பாரம்பரிய முறையைத் தவிர்த்து, மேற்கத்திய அல்லது கிரிகோரியன் நாள்காட்டியின் படி டிசம்பர் 25ஆம் திகதி கிறிஸ்துமஸ் பண்டிகையை உக்ரைன் மக்கள் கொண்டாடினர்.

இது தொடர்பான அறிவிப்பை அதிபர் ஸெலென்ஸ்கி நேற்று முன்தினம் (டிச. 24) அறிவித்திருந்தார்.

அதில் நாட்டு மக்களுக்கு அவர், அனைத்து உக்ரைன் மக்களும் ஒன்றிணைந்து கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாட வேண்டும். ஒரே நாளில், ஒரு பெரிய குடும்பமாக, ஒரே நாடாக நாம் ஒன்றிணைய வேண்டும், எனக் குறிப்பிட்டிருந்தார். (04)

## ரஷ்யப் போர் விமானங்கள், ட்ரோன்கள் சுட்டுவீழ்த்தியதாக உக்ரைன் தெரிவிப்பு

ரஷ்யாவின் போர் விமானங்கள் மற்றும் ட்ரோன்களை சுட்டுவீழ்த்தியதாக உக்ரைன் நேற்று தெரிவித்தது.

இது குறித்து அந்த நாட்டு அதிகாரிகள் தகவல் வெளியிட்டபோது, உக்ரைனின் தெற்கு மற்றும் மத்தியப் பகுதிகளைக் குறிவைத்து ட்ரோன்கள் மூலமாகவும், போர் விமானங்கள் மூலமாகவும் ரஷ்யா ஞாயிற்றுக் கிழமை இரவு தாக்குதல் நடத்தியது.

எனினும், உக்ரைன் விமானப் படை அந்த போர் விமானங்களையும், ட்ரோன்களையும் சுட்டுவீழ்த்தியது. அந்த வகையில், 2 போர் விமானங்களும், ஈரானில் தயாரிக்கப்பட்ட 28 ஷஹீத் ரக ட்ரோன்களும் அழிக்கப்பட்டன என்று அதிகாரிகள் கூறினர்.

எனினும், ரஷ்யாவின் தாக்குதலிலோ, சுட்டுவீழ்த்தப்பட்ட விமானச் சிதறல்கள் விழுந்ததிலோ யாரும் காயமடைந்ததாக உடனடி தகவல் வெளிவரவில்லை.

ஏற்கெனவே, தங்கள் நாட்டில் பறந்து வந்த 3 ரஷ்ய போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக உக்ரைன் சனிக்கிழமை கூறியிருந்தது.

இது குறித்து அந்த நாட்டு விமானப் படை வெளியிட்ட அறிக்கையில், கெர்சான் பகுதி வான் எல்லையில் ரஷ்யாவின் எஸ்யு-34 ரகத்தைச் சேர்ந்த 3 விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில், ரஷ்யாவின் மேலும் 2 போர் விமானங்களும், 28 ட்ரோன்களும் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளதாக உக்ரைன் தற்போது தெரிவித்துள்ளது.

தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவது தங்களின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதுகிறது.

இருந்தாலும், உக்ரைனின் தற்போதைய அரசு நேட்டோவில் இணைய ஆர்வம் காட்டி வந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் தேதி படையெடுத்திருந்தது. (04)

## சீனாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் இறப்பு எண்ணிக்கை 149 ஆக ஏறியது

சீனாவின் வடமேற்கே ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 149 ஆக அதிகரித்துள்ளது.

அந்த நாட்டின் கான்சு மாகாணம், ஜிஷிஷன் மாவட்டத்தில் திங்கள்கிழமை நள்ளிரவு ஏற்பட்ட 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 அலகுகளாகப் பதிவானது. இந்த நிலநடுக்கத்தால் அருகிலுள்ள மக்கள் நெருக்கம் மிகுந்த கின்காய் மாகாணமும் குலுங்கியது.

இதில் கட்டடங்கள் இடிந்து விழுந்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 149-ஆக அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் திங்கள்கிழமை கூறினர். மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள கான்சு மாகாணத்தில் மட்டும் 117 பேர் உயிரிழந்தனர். கின்காய் மாகாணத்தில் 31 பேர் இறந்தனர். சீனாவின் யுன்னான் மாகாணத்தில் கடந்த 2014-ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 617 பேர் உயிரிழந்தனர். அதற்குப் பிறகு அந்த நாட்டில் ஏற்பட்டுள்ள மிக மோசமான நிலநடுக்கம் இதுவாகும். (04)

# சிறாஜியா அரபுக் கல்லூரியின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு



(கே.எ.ஹமீட்)

தம்பலகாமம் சிறாஜ் நகர் சிறாஜியா அரபுக் கல்லூரியின் நிருவாகத்தினர், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக ஐளுசுஊ நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் உருவாக்கப் பட்ட நீர்த்தாங்கி நேற்று திங்கட்கிழமை அவரால் கல்லூரியின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் சுபியான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் இமாம் தீன், மத்திய குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# வரலாற்று விழுதுகள் அமைப்பால் பல்கலை மாணவருக்குப் பாராட்டு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வரலாற்று விழுதுகள் அமைப்பின் அனுசரணையுடன் பல்கலைக்கழகத் திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பரிசளிப்பு விழாவும், 2023 ஆண்டு உயர் தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வும் களுவாஞ்சிகுடி அன்னை இல்லம் மண்டபத்தில் தலைவர் த.ஐங்கரன் தலைமையில் கடந்த சனிக் கிழமை (23)இடம்பெற்றது.

இதன் போது வரலாற்று விழுதுகள் அமைப்பிற்கான சிறப்பு மேலாடை அறி முகமும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபைச் செயலாளர் திரு. மூ. கோபாலரெத்தினம் கலந்து கொண்டார்.



# புத்தளம் கால்பந்தாட்ட தொடரில் லிவர்பூல் கழகம் சம்பியனானது!

புத்தளம் லெஜன்ட்ஸ் கழகத்தின் பூரண அனுசரனையில், விம்பிள்டன் கழகத்தின் முன்னாள் வீரர் மர்ஹூம் ஜனாப் ஞாபகார்த்தமாக புத்தளம் நகரில் நடைபெற்ற கால்பந்தாட்ட தொடரில் புத் தளம் லிவர்பூல் கழகம் வெற்றி வாகை சூடியது.

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கில் அங் கம் வகிக்கும் 12 அணிகளுக்கு இடையி லான அணிக்கு ஒன்பது பேர் கொண்ட இந்த கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கிறிஸ்மஸ் தினமான நேற்று புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கில் அஙகம் வகிக்கும் 12 அணிகளும் நான்கு குழுக் களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவி லும் வெற்றி பெற்ற நான்கு அணிகள் அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

அந்த வகையில் லிவர்பூல், த்ரீ ஸ்டார்ஸ், யுனைட்டட் மற்றும் போல்டன் அணிகள் அரை இறுதி போட்டிக்கு முன்னேறிய அணிகள் ஆகும்.

முதலாவது அரை இறுதிப் போட்டியில் லிவர்பூல் மற்றும் த்ரீ ஸ்டார் கழகங்கள் போட்டியிட்டதில் லிவர்பூல் கழகம் 1 - 0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரை இறுதி போட்டியில் யுனைட்டட் கழகம் போல்டன் அணியை 1- 0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறி யது.

மிகவும் விறுவிறுப்பாக காணப்பட்ட இறுதிப் போட்டியில் இரு அணிகளும் தலா 1 - 1 என்ற கோல் கணக்கில் போட்டி சம நிலையில் முடிவடைந்த நிலையில் வெற்றியை தீர்மானிக்கும் பெனால்டி முறையில் லிவர்பூல் கழகம் 3 - 2 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

இந்த சுற்றுத் தொடரின் சிறந்த கோல் காப்பாளராக போல்டன் அணியை சேர்ந்த முனாசிர் தெரிவு செய்யப்பட்டார். தொட ரின் சிறந்த வீரராக லிவர்பூல் கழகத்தின் பவாஸ் தெரிவு செய்யப்பட்டார்.



# பொலநறுவை சைக்கிளோட்ட நிகழ்வுக்கான ஊடக மாநாடும் புதிய மேலங்கி அறிமுகமும்



(நூருல் ஹுதா உமர்)

எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளில் மருதமுனை சைக்கிளிங்க கிறீன் கழகத்தினால் பசுமையாக்கம், விதைப்பந்தாக்கம், மிதிவண்டிப் பாவனையை அதிகரித்தல், நஞ்சற்ற உணவை, காலநிலை மாற்றம் சம்பந்தமான விழிப்புணர்வுகளை மையமாகக் கொண்டு பிரமாண்டமானமளவில் நடைபெற ஏற்பாடாகியிருக்கும் "பொலநறுவை சைக்கிளோட்டம்" சம்பந்தமான ஊடக மாநாடும், புதிய மேலங்கி அறிமுகமும் நேற்று திங்கட்கிழமை இரவு மருதமுனை அல்-ஹிக்மா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த ஊடக மாநாட்டில் "பொலநறுவை சைக்கிளோட்டம்" சம்பந்தமாக எம்.எப். ஹிபத்துல் கரீம் (பதிவாளர் ஊவா- வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்), கலாநிதி சத்தார் பிர்தௌஸ் (ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்), எம்.எஸ். எம். பசீல் (பொறியியலாளர், தென்கிழக்குப் பல்கலைக் கழகம்), ஏ.எம். றியாஸ் அகமட் (தலைவர், உயிரியல் பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழம்), நைறுஸ்கான் ஹிதாயத்துல்லாஹ் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), அஷ்ஷெய்க் யு.எல்.எம். சாஜித் (கலாசார உத்தியோகத்தர்) ஆகியோர் விளக்கவுரைகளை வழங்கினர்.

மருதமுனையில் இருந்து எதிர்வரும் 30.12.2023ம் திகதி ஆரம்பித்து புதுக்குடியிருப்பு - ஏறாவூர் - ஓட்டமாவடி - நாவலடி - புணானை - றிதிதென்ன - வெலிகந்த - மன்னம்பிட்டி - கல்லெல்ல - கதுறுவல -பொலநறுவ - தம்பாளை - சுங்காவில் போன்ற பிரதேசங்களுக்கு சென்று எதிவரும் 31 ஆம் திகதியன்று மீண்டும் சைக்கிளோட்டிகள் மருதமுனையை வந்தடைய உள்ளனர்.

இந்த பயணத்தின் போது 20 சைக்கிளோட்டிகள் கலந்து கொண்டு பாடசாலை சுற்றாடல் கழகங்களை சந்திக்க உள்ளதுடன் இவர்கள் விதைப்பந்துகளையும் வீச உள்ளமை குறிப்பிட்டத்தக்கது.

# கிண்ணியாவில் ஆழிப்பேரலையின் 19 ஆவது நினைவு தினம் அனுட்டிப்பு

(ஹஸ்பர்)

ஆழிப்பேரலையின் நினைவு அனுட்டிப்பு இன்று கிண்ணியா நகர சபையின் தோனா சிறுவர் பூங்காவில் உயிர் நீத்தவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபிக்கருகில் இடம் பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தலைமயில் இடம்பெற்ற குறித்த நினைவு தினத்தில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட செயலாளர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி கலந்துகொண்டார்.

இதில் சுனாமியின் போது உயிரிழந்த உறவுகளுக்காக துஆ பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.

இதே வேளை கிண்ணியா உப்பாறு கடலூர் கோயிலிலும் விசேட பூசைகள் நிகழ்த்தப்பட்டு உயிர் நீத்தவர்களுக்காக கடலில் மலர் தூவப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதி பணிப்பாளர் கே.சுகுனதாஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நகர சபை, செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், இளைஞர் அமைப்புக்கள், பாடசாலை மாணவிகள், சமூக ஆர்வலர்கள், மதத் தலைவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.








# திருமலையில் மிக உயரமான கிறிஸ்மஸ் மரம் அமைப்பு



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண வரலாற்றில் மிகவும் உயரமான கிறிஸ்மஸ் மரம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டு, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை டச்பே கடற்கரையில் இந்த கிறிஸ்மஸ் மரம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 24 ஆம் திகதி இரவு இடம்பெற்ற விசேட சமய ஆராதனை நிகழ்வுகளிலும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துகொண்டிருந்தார்.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள, மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க,மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி உட்பட திணைக்கள தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்



# கொழும்பு ஏவ் மரியா பாடசாலைக்கு உதவிகளும் மாணவர் மகிழ்வூட்டலும்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு ஏவ் மரியா பாடசாலைக்கு எக்ஸிமினேட்டர் பீ.எல்.சி.நிறுவனம் பாடசாலை தளபாடங்களை வழங்கி வைத்ததுடன் மாணவர்கள் மகிழ்ச்சியாக சந்தோசப்படுத்தும் நிகழ்வுகளையும் ஒழுங்குசெய்திருந்தது.

எக்ஸிமினேட்டர் பீ.எல்.சி. நிறுவனம் கிறிஸ்மஸ் பண்டிக் காலத்தில் கொழும்பில் மிகவும் ஏழ்மையான பிரதேசத்தில் அமைந்து காணப்படும் ஏவ் மரியா பாடசாலைக்கு பல விதமான உதவிகள் புரிந்துள்ளதுடன், அப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் சந்தோசமாக, மகிழ்ச்சியாக இருப்பதற்கான நிகழ்வின்றையும் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒழுங்கு செய்திருந்தது.

இப்பாடசாலைக்கு தேவையான கதிரைகள், கலையரங்கம் மற்றும் இசைக்கருவிகளை வழங்கி வைத்ததுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358